02.02.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஓ.எஸ்.எண். 68 /2015) திரு.குருசங்கர்.

8 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

1) இந்த வழக்கின் 14 ம்பிரதிவாதி இராமச்சந்திரனை எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. இந்தவழக்கில் 9,14 பிரதிவாதி இராமச்சந்திரன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பக்கம் 3 ல் இந்த வழக்கில் உள்ள 14 ம்பிரதிவாதி இராமச்சந்திரன் இறந்துவிட்ட 1 ம்பிரதிவாதி அய்யலுசாமியிடமிருந்து 30.05.1991 ஆம் ஆண்டு கிரையம் பெற்றுள்ள 1991 ஆம் ஆண்டு ஆவண எண்.632/1991 ன் படிவீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார். வீட்டு எண்.677/3 என்று கண்டுள்ளது என சொல்லியுள்ள விவரத்தை நான் மறுத்து சொல்லவில்லை என்றால் மேற்படி விவரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் மறுத்து சொல்லவில்லை,காட்டப்படும் ஆவணம் இராமச்சந்திரன் என்பவர் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 14 ஆம்பிரதிவாதி சர்வே எண்.86/6 பி-யில் வீடு கட்டுவதற்காக கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் பெற்ற கட்டிட அனுமதி என்றால் சரிதான். அந்த கட்டிட அனுமதி வரைபடக்கடிதம் மற்றும் வரைபடம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.86/6 என்பது 86/6 ஏ,6 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.86/6 ஏ என்பது நெடுஞ்சாலை நிலஆர்ஜிதத்திற்காக 14 செண்டு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 28.06.1971 என்றால் சரிதான். மேற்படி நெடுஞ்சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு நாங்களோ, எங்களது முன்னோர்களோ இழப்பீடு பெறவில்லை என்றால் சரிதான்.நில எடுப்பு அறிவிப்பு **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நிருபண வாக்குமூலம் பாரா 5 ல் மூக்கம்மாள் என்ற கிருஷ்ணம்மாள்,மேற்படி குமாரர்கள் சீனிவாசன், ராமானுஜம்,அய்யலுசாமி ஆகியோர்களுக்கு 12.06.1976 ல் ஒரு பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 1976 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். 1976 ஆம்ஆண்டு பாகப்பிரிவினை ஆவணம் சப்ரி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) எனது பிராதில் 16ம்பிரதிவாதியாக கனகலட்சுமி என்பவரை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 29.12.1984ல் அய்யலுசாமி 16ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். 29.12.1984ஆண்டு அய்யலுசாமி 16ம்பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சப்ரி நகல் **பி.வா.சா.ஆ.5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.86/6 என்பது 1971ஆம்ஆண்டுக்கு முன்பே சர்வே எண்.86/6ஏ,6பி என பிரிக்கப்பட்டது என்றால் விற்றது தான் தெரியும் பிரிக்கப்பட்டது பற்றி தெரியாது. சர்வே எண்.86/6- பி நிலமான மின்இணைப்பு கொடுக்கப்பட்டு குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் தெரியாது. தாவாச்சொத்திற்கு போய் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் எனது தந்தை இறப்பதற்கு முன்பு 2013ஆம் வருடத்தில் சொத்திற்கு என்னை அழைத்து சென்று இது நம்ம சொத்து என்று கூறினார். அப்போது அதில் கட்டிடங்கள் இல்லை. பல வருடங்களுக்கு முன்பே வீடுகள் இருந்தது சாலைகள் அமைக்கப்பட்டுமின் சார இணைப்பு கொடுக்கப்பட்டு குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டியிருந்தது என்றும் நான் வழக்கிற்காக இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் எனது அனுபவத்தில் இல்லை அதனால் எனது பிராதில் பிரதிவாதிகள் 2014ல் இடைஞ்சல் செய்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் இல்லை. இந்த வழக்குசொத்து எனக்கோ எனது முன்னோர்களுக்கோக எந்தக்காலத்திலும் பாத்தியப்பட்டதும் இல்லை நாங்கள் அனுபவித்ததும் இல்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ள 29.03.1937 கிரைய ஆவணத்தில் தாவாச்சொத்து இல்லை என்றால் இல்லை ஆனால் விடுபட்டுபோய்விட்டது. தாவாச்சொத்தில் வாதிகளாகிய நாங்கள் எந்தக்காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து 1ம்பிரதிவாதியின் தந்தைக்குப் பாத்தியப்பட்டியிருந்தது என்றால் சரியல்ல. எனது வழக்கு காலவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதன் முதலில் வழக்குதாக்கல் செய்வதற்காக பொது அதிகார ஆவணம் கொடுத்திருந்த நபரின் பெயர் என்னவென்றால் திருமணிப்பாண்டியன். திருமணிப்பாண்டியன் எனக்கு உறவினர் அல்ல என்றால் சரிதான். அவருக்கு சொந்த ஊர் எது என்றால் எனக்கு தெரியாது. அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறார் என்றால் அதுவும் எனக்குதெரியாது. தாவாச்சொத்துக்கள் வீட்டுமனைகளாக உள்ளதுஎன்றால் நான் பார்த்த போது அப்படி

இல்லை தற்போது அப்படி இருக்கலாம். தாவாச்சொத்தை புஞ்சை என்று கூறி குறைத்து மதிப்பு குறைவான நீதிமன்ற கட்டணம் கட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

11,14,16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - 11,14,16 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் 8ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கூறியதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.02.2026.